27th December 1956] [Sri P. Venkatesha Sholagar]

படவில்லை. புறம்போக்கு நிலங்களை ஒதுக்குவதற்கு ஒரு நிரந்தர திட்டத்தை வகுக்கா விட்டாலும்கூட நடைமுறையில் இருக்கும் திட்டத்தை நிறைவேற்று வதற்கு சர்க்கார் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

The Hon. Sri C. SUBRAMANIAM: சோழிகர் அவர்கள் சொன்ன விஷயங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

Sri S. RAMALINGAM; On a point of Order Sir, அவர் பெயர் சோழகர். ச்சாழிகர் அல்ல. (சிரிப்பு).

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and Schedule were put and carried.

Clause 1 and Preamble were put and carried.

The Hon. Sri C. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be passed."

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be passed."

The motion was put and declared carried.

(A division was demanded and the division Bill was rung.)

DEPUTY SPEAKER: I am going to put the motion once again to the vote of the House. The question is— 10-50 a.m.

"That the Madras Appropriation (No. 6) Bill, 1956, be passed."

The motion was put and carried and the Bill was passed.

IV.—GOVERNMENT MOTIONS—*cont.*

(2) ASSOCIATION OF COUNCIL MEMBERS WITH THE PUBLIC ACCOUNTS COMMITTEE OF THE ASSEMBLY.

The Hon. Sri C. SUBRAMANIAM: Sir, I beg to move—

"That this House recommends to the Legislative Council that they do nominate five members from the Council to associate with the Public Accounts Committee of this House for every financial year and communicate to this House the names of the members so nominated."

(Interruption from the hon. the Leader of the Opposition.)

Now it is suggested by the hon. the Leader of the Opposition that this could be taken up in the next Assembly. Yes, nothing is lost and it can be taken up in the next Assembly. So, I am not proceeding with the Motion.

DEPUTY SPEAKER: What about the other Government Motions? I think the Government are not moving the other Motions also. So, we shall now take up the Official Language Bill.

V.—GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS OFFICIAL LANGUAGE BILL, 1956.

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, "1956-ம் வருஷத்திய சென்னை அரசாங்க மொழி மசோதாவை" இச்சபை முன் சமர்பித்து, இதை உடனடியாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று பிரேரேபிக்கிறேன்.

இந்த மசோதாவை இச்சபை முன்பு பிரேரேபிக்கும்பொழுது நிர்வாகத் துறையிலேயே மிக முக்கியத்துவம்பெற்ற ஒரு நிகழ்ச்சி இது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நிர்வாகத் துறையிலே இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்று சொல்லும்பொழுது, அந்தத் துறைக்குமட்டும் உரித்தானது அல்ல; இது மற்ற சூழ் நிலைக்கு ஏற்ப நிர்வாகத்திலும் செய்யக்கூடிய ஒரு மாறுதல் என்பதைத்தான் நாம் நன்றாக உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஒரு பூ மலர்கின்றது. அது மலர்கின்ற நிகழ்ச்சி நம் எல்லோருக்கும் மகிழ்வை கொடுக்கிறது. அம் மலர்ச்சி ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. செடி வளர்ந்து, பிறகு அரும்புவிட்டு, போதாகி அது மலர்கிறது. அது மலர்வதோடு நின்றுவிடுவதில்லை. அதில் காய் ஏற்பட்டு அது பழுத்து மக்களுக்கும் உதவுகிறது. அதேமாதிரிதான் தமிழ் மலர்கிறது என்றால் அது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. நம் நாட்டிலே இந்த ஐம்பது, அறுபது வருஷ காலமாக நடந்த நிகழ்ச்சிகளின் ஒரு பலனாக இன்றைக்கு ஒரு செடியிலே ஒரு பூ மலர்கிறது. இதிலும் நல்ல காயும் கனியும் ஏற்பட்டு மக்களுக்கு பயனளிக்கக்கூடிய முறையிலே இது இன்னும் நன்றாக வளர்ச்சி அடையும் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. ஆகையினால் நம்முடைய அரசாங்க மொழி தமிழாக இருக்கும் என்று பிரகடனம் செய்வதிலே நாம் ஒரு பெரிய முன்னேற்ற பாதையிலே ஒரு அடியை எடுத்து வைத்திருக்கிறோம்.

இன்றைக்கு தமிழை அரசாங்க பாஷையாகப் பிரகடனம் செய்கிறோம் என்றால், பிரகடனம் செய்த உடனேயே எல்லாவித மாறுதல்களும் உடனடியாக ஏற்படவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடிய நிலைமையில் இல்லை. எல்லா துறைகளிலும் தமிழையே உபயோகப்படுத்துவதற்கு பல முயற்சிகள், பலவிதமான ஏற்பாடுகள் செய்வது மிகவும் அவசியம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் சில இப்பொழுதே செய்யப்பட்டு முடிவடைந்திருக்கின்றன. சில இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலும் தமிழிலேயே நிர்வாகம் நடக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது, ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை நிர்ணயம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். இத்துறையிலே ஒரு கமிட்டி நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் தங்களுடைய ஆலோசனைகளை சர்க்காருக்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். அதற்காக ஒரு விழாவும்கூட நடந்தது எப்பதை அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆகையினால். இன்றைக்கு நிர்வாகத்திலே இருக்கக்கூடிய முக்கியமான ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை நிர்ணயம் செய்ய வேண்டும். அந்த வார்த்தைகளையே நிர்ணயம் செய்து அதைப் பழக்கத்திற்கு கொண்டுவரவேண்டியது மிகவும் முக்கியம். இது முதல் ஏற்பாடாக அமையவேண்டியிருக்கிறது.